பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

கலர்: 6 பிரமோதூத ஷூ பங்குனி மீ 04 உ. திங்கட்கிழமை [18-03-1991] UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 111

# தமிழர் சுயநிர்ணய போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்!

## புலிகள் பிரமுகர்கள் கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 18

ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமைக்காக விடுதலைப் புலிகள் நடத்தும் போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் விரும்புகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கமும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகியும் இவ்வாறு தெரிவித்தனர்.

இந்தியாவில் பொதுத் தேர்தலுக்குப் பிறகு அமையும் புதிய அரசாங்கம் ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண உதவ வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கேட்டுக் கொள்ளும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் வைத்து இந்தியப் பத்திரிகையாளர் குழு ஒன்றுக்கு அளித்தபேட்டியின் போது இவர்கள் இருவரும் முன்கண்டவாறு தெரிவித்தனர் என்று இந்திய வானொலி அறிவித்தது.

1987 இலங்கை - இந்தியஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து, இந்தியாவுடன் போர் நடத்திய விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இப்போது இந்தியா ஒருபிராந்திய வல்லரசு என்ற முறையில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மேலும் 10 கோடி ரூபா கட்டுநிதி வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாண மாவட்டத்தில், அவசரக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கென, திறைசேரி பத்துக் கோடி ரூபாவுக்கான கட்டுநிதியை அனுப்பி வைத்துள்ளது.

ஓய்வூதியம், சம்பளம் மற்றும் முக்கிய கொடுப்பனவுகளை வழங்க இந்தக் கட்டுநிதி பயன்படுத்தப்படும்.

இம்மாத ஆரம்பத்தில் 6 கோடி 50 லட்சம் ரூபா பெறுமதியான கட்டுநிதி ஏற்கனவே இங்கு வந்திருந்தது. [அ-3]

## பல்கலைக்கழகமாணவருக்கு ம. எண்ணெய் கிடைக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் மண்எண்ணெய் வழங்க இரண்டு வாரங்களுக்கு ஒருதடவை 10 பரல் மண்எண்ணெய் இங்கு அனுப்ப அனுமதி கிடைத்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை 10 பரல் மண்எண்ணெய், 7 பரல் டீசல், 1 பரல் பெற்றோல், 1 பரல் என்ஜின் ஒயில் ஆகியவற்றை கொண்டுவர கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

கொண்டுவரப்படும் மண்எண்ணெய் சட்டுப்பாட்டு விலையில் மாணவர்களுக்கு வழங்கப்படும். ஏனைய எரிபொருள் வகைகள் பல்கலைக்கழக செயற்பாடுகளுக்குப் பாவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## மகஸின் சிறைச்சாலையில் 292 தமிழர்கள் காவலில்

கொழும்பு மகஸின் சிறையில் 292 தமிழர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்களில் 75 சதவீதமானோர் பத்து மாதங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அனைவரும் அப்பாவிகள் என்றும் அவர்கள் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்தி விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. [ஒ-எ]

## மேஜர் செங்கதிர் வவுனியாவில் வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலக பிரசாரப் பொறுப்பாளர் மேஜர் செங்கதிர் கடந்த மாதம் 25 ஆம் திகதி வவுனியா இராணுவ முகாம் அருகே வழி தவறிச் சென்ற போது, எதிரியின் சூட்டுக்கு இலக்காகிவீரமரணம் அடைந்தார்.

32 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான செங்கதிர் [நடேசு இரஞ்சித வரதராசா] 1984 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்தார் இந்தியப் படையினருடனான போர்க் காலத்தில் வடமராட்சிப் பகுதியிலேயே நின்று போராட்டத்தில் ஈடுபட்டார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உதயமான வேளை அதன் துணை அமைப்பாள

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 3 மாதங்களின் பின்னர் வந்து சேர்ந்த 60 லட்சம்!

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ். பல்கலைக்கழகத்தின் நடைமுறைச் செலவுகளுக்கு இரு மாதத்துக்கு ஒரு தடவை 60 லட்சம் ரூபாவைப் பணமாகப் பெறுவதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

இந்த அனுமதியை அடுத்து முதல் தடவையாக நேற்று முன்தினம் பருத்தித்துறை வந்து சேர்ந்த 'குமண' கப்பலில் 60 லட்சம் ரூபா கொண்டு வரப்பட்டுள்ளது.

அத்துடன் பல்கலைக்கழக தேவைகளுக்காக 60 ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகளும் கொண்டுவரப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழக

[4 ஆம் பக்கம் பார்க்க]

## விஜேதுங்க திரும்பிய கையோடு சிலாவத்துறையில் தாக்குதல்

### சிப்பாயின் சடலம் புலிகளால் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

புதிய பாதுகாப்புத் துணை அமைச்சராக பிரதமர் திரு. விஜேதுங்க பதவி ஏற்ற பின்னர் முதல் தடவையாக நேற்று முன்தினம் மன்னாருக்கு விஜயம் செய்திருந்தார்.

விஜேதுங்க மன்னாரில் இருந்து திரும்பிய சில மணி நேரத்தில் பிற்பகல் 2 மணியளவில் சிலாவத்துறை முகாமில் இருந்து படையினர் 2 பொம்மர்கள், 2 ஹெலிகளின் உதவியுடன் வெளியேற முற்பட்டனர்.

அப்போது முகாமில்இருந்து 700 யார் தூரத்தில் படையினரை வழிமறித்து விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர்.

படையினர் இழப்புகளுடன் பின்வாங்கி முகாமைச் சென்றடைந்தனர்.

சண்டையின் போது கொல்லப்பட்ட சிப்பாய் ஒருவரின் சடலத்தையும், ஏ. கே. மகஸின் - 2, ஜே. ஆர். கிரனேட் - 1 ஆகியவற்றையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இதேசமயம் மன்னார் மாவட்டத்தில் நடந்த மோதல் ஒன்றில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும், படையினர் 8 பேர் படுகாயமடைந்தனர் என்றும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன. [ஒ]

## முச்சந்தி முரளி




தேங்காயிலை இருந்து விளக்கு எரிக்க எண்ணை எடுத்துப் போடுவினம் எண்டு நினைச்சிருப்பினம்......!

## 4 சிப்பாய்கள் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 18

கடந்த இரண்டு தினங்களாக வவுனியா மாவட்டத்தில் நடந்த இராணுவ நடவடிக்கையின்போது 4 சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன. [ஒ-எ]

## நிலாவெளியில் கண்ணி!

யாழ்ப்பாணம், மார்ச் 18

நேற்றுக் காலை 10 மணியளவில் நிலாவெளி பஸ் நிலையத்தில் இராணுவத்தினர் நின்ற சமயம் அங்கு விடுதலைப் புலிகள் ஏற்கனவே வைத்திருந்த கண்ணி வெடி ஒன்று வெடித்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏற்பட்ட சேதவிவரம் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. [உ]

## தேங்காய் கொண்டு வரவும் படையின் அனுமதி தேவை!

யாழ்ப்பாணம், மார்ச் 18

வவுனியாவுக்கு இப்பால், வடக்கே தண்ணீர்ப் போத்தல் கொண்டு வருவதானாலும். கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் மனம் இரங்க வேண்டும்! இல்லையேல் அரோகரா தான்!!

முப்பதுக்கும் மேற்பட்ட பொருள்களை வடக்கே கொண்டு வர முடியாது என்று கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் பட்டியல் போட்டுத் தடை செய்துள்ளது.

அவற்றில் சப்பாத்து மினுக்கப் பயன்படுத்தப்படும் ''பொலிஷ் ரின்''னும் அடங்கும். பாடசாலை மாணவர்களின் பள்ளிக்கூட ''பாக்கு'' களும் [Bag] தடைப் பட்டியலில் அடங்கியுள்ளன.

அவை தான் போகட்டும். தேங்காய் தடை செய்யப்பட்ட பொருள்கள் பட்டியலில் இல்லை. ஆனால் இலாபம், புத்தளம் பகுதிகளில் தேங்காய்களை கொள்வனவு செய்து இங்கு கொண்டு வருவதற்கும் கூட்டுப் படைத் தலைமை அலுவலகத்திடம் அனுமதி பெற வேண்டி உள்ளது!

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### ரைப்ரைட்டர்கள்

Typewriters:- தமிழ் - ஆங்கிலம் வாங்கவும், விற்கவும். சிறந்த முறையில் திருத்தவும், எல்லாவித தட்டச்சு இயந்திரங்கள், உதிரிப்பாகங்களுக்கும் FUDO: 39/17, மின்சார நிலைய வீதி, 8ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [பஸ் நிலையம் முன்பாக] [சி-5835]

### தேவை

சோயா, குரக்கன் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்: அண்ணா தொழிலகம், இணுவில். [சி-4806]

### நோவு எண்ணெய்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய், எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். [14925]

### ஆசிரியர் பயிற்சி

தமிழ், ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆசிரியர் பயிற்சி முடிவில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் தொடர்பு: நேரில் STCA, 149 [37], சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். [16136]

### தொழிற்கல்வி

தட்டெழுத்து, சுருக்கெழுத்து, அலுவலக நடைமுறைகள், கணக்கியல், ஆங்கிலம் STCA ஸ்தாபிதம் 1977 — அரசாலும், லண்டன் பிற்மனாலும் அங்கீகரிக்கப்பட்டது. 149 [37], சிவன் பண்ணை வீதி. [யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்திற்கு அண்மையில்] யாழ்ப்பாணம். [16137]

---

## University of Jaffna, Sri Lanka

Applications will be received by me from suitable candidates for the following post upto 1991 - 04 - 02

POST: SUB - WARDEN (FULL - TIME) (FEMALE) ON CONTRACT

AGE: Not more than 40 Years.

SALARY SCALE: Rs. 4000/-P. m. (Fixed)

Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar Establishments of this University.

Request for Application forms for the above post should be accompanied by a self-addressed stamped envelope of 23x10 c. m. in size.

**REGISTRAR.**

University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1991 - 03 - 14. [C-5865]

---

தவக்கால சிறப்பு நிகழ்ச்சியாக
யாழ் - திருமறைக் கலாமன்றம் வழங்கும்

## சிலுவை உலா

(பக்தி, இசை, உரை, நாடகம்)

காலம்: 1991 பங்குனி 22, 23, 24 ஆம் திகதிகளில்
நேரம்: மாலை 6 - 45 மணி
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

பிரவேசம் இலவசம்!

ஆசனப்பதிவு விரும்புவோர் அலுவலகத்துடன் முன்னதாகத் தொடர்பு கொள்ளுங்கள்!

(C/5864)

---

பட்டதாரிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

## இலங்கை கல்வி நிருவாக சேவை

(S. L. E. A. S.)

III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கு
நடைபெறவிருக்கும் போட்டிப் பரீட்சைக்கான

## விசேட பயிற்சி வகுப்புகள்

பல தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின்
இணைந்த சேவை

## ஆரம்பம்: 23-03-91

முற்பகல்: 9-00 மணி

பாடநெறி: 1. இரகித்தல்
2. நுண்ணறிவுத்தேர்வு

தகைமைகள்: 22—30 வயதுக்கு உட்பட்ட பட்டதாரிகள் யாவரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 25—03—91**

பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களையும்
விவரத்திரட்டினையும்
எம்மிடம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில் மட்டும்.
★ இலவச பாடக்குறிப்புகள்.
★ கட்டணம் ரூபா 280.00 (முழுப்பயிற்சிக்கும்)

விவரங்களுக்கு:
நேரில் மு. ப. 9-00 —11 மணி வரை

## ASTAN INSTITUTE

101/10, STANLEY ROAD,
JAFFNA.
[மக்கள் வங்கிக்கு அருகாமையில்]
[சி-5855]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

உதயம்:
1907 — 08 — 02



திருநிழல்:
1990 — 03 — 18

அமரர்
## சின்னப்பு சின்னத்தம்பு (J. P.)

(இளைப்பாறிய தபாலதிபர்)

அன்புடனே அப்பா என்றும் அப்பப்பா என்றும் உன் பிரிவை ஆற்றாது, உள்ளம் உருகிட என்றும் கற்பக விநாயகன் கழல் நிழல் உறைந்திட இன்றே போற் கழிந்தது ஓராண்டே!

மைந்தர், மருகர், பேரர்.

நாவலடி,
பன்னாலை, தெல்லிப்பழை. [illegible]

---

## புலமைப்பரிசில் பரீட்சைக்கு கிழக்கில் விண்ணப்பமில்லை

இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள விசேஷ ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து விண்ணப்பம் எதுவும் வந்து சேரவில்லை என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்திருக்கிறார்.

இம் மாவட்டங்களில் இருந்து விண்ணப்பங்களைத் தாம் இன்னும் எதிர்பார்ப்பதாகவும் ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார். வடக்கு - கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் இருந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் சொன்னார்.

விண்ணப்பங்கள் அனுப்பும் கடைசி நாள் 15 - 03 - 1991 இல் முடிவடைந்தது. [இ-எ]

---

## யாழ். வர்த்தகர் சங்கம்

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட சகல வர்த்தகர்களும் 162, யாழ் / ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சங்கரப்பிள்ளை கட்டடத்தின் 2 ஆம் மாடியிலுள்ள யாழ் / வர்த்தகர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு 31 - 03 - 1991 க்கு முன்னர் சங்க உறுப்பினர்களாக சேர்ந்துகொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்

சி. நமசிவாயம், செயலாளர்.
க. வி. குலரத்தினம், தலைவர்.

[16140]

---

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்களிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

## O|L துரிதமீட்டல் வினா - விடை வகுப்புக்கள்

## DAY CLASSES

[8-30 — 1-30]

ஆரம்பம்: 20 - 03 - 1991

## SAT. & SUN. CLASSES

[8-00 — 2-00]

ஆரம்பம்: 23 - 03 - 1991

மு குறிப்பு: i எமது அனுபவமும், தனித்துவமும் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்

ii இம் முறையும் பயிற்சிப்பரீட்சையும் நடத்தப்படும். [சி-5861]

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்

## அமரர் குமார் சிவக்கொழுந்து

மலர்வு:
05 02 - 1953

உதிர்வு:
02 - 02 - 1991



அம்மா நீர் பிரிந்து நாட்கள் 45 சென்றாலும், உங்கள் நினைவாக நாம் தவிக்கின்றோம் உமது இடம் நிரப்ப யாரும் இல்லை என ஆயிற்று.

அம்ம! எமது இதயத்தில் தென்றலாக வீசி, உமது இதயத்துடிப்பை நிறுத்தியதனால் எமது இதயம் தீயால் சுட்டது போல் ஆயிற்று.

அன்பினால் தாலாட்டி எம்மை உறங்க வைத்தாய். உம்மை இயற்கைத் தாய் தாலாட்டி உறங்க வைத்ததனால் எம்மைத் தாலாட்டி உறங்க வைக்க யாரும் இல்லை எனத் தவிக்கின்றோம். தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்!
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்.

ரேகச்சந்திரன் வீதி,
பன்னாலை சிறுப்பிட்டி,
நீர்வேலி.

[16142]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சமூகத்துக்கு உழைக்கும் பயிற்சி

மக்கள் இன விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், புத்திஜீவிகள், திறமைசாலிகள் எனப்படுவோர் வெளிநாடுகளுக்கு ஓடுவது ஈழத்தமிழர்கள் மத்தியில் எழுந்துள்ள ஒரு முக்கிய பிரச்சினையாகும்.

தாங்களும் தமிழர் சமூகத்தின் ஓர் அங்கம். தாங்கள் பிறந்தது, வளர்ந்தது, பயின்றது எல்லாம் இந்த மண்ணில். இந்த மண்ணினதும், மக்களினதும் வளங்களைப் பயன்படுத்தியே தாம் வளர்ந்தார்கள், பயின்றார்கள், பட்டம் பெற்றார்கள், சம்பந்தப்பட்ட துறையில் பாண்டித்தியம் அடைந்தார்கள் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். அதன் காரணமாக இந்த மண்ணுக்கும், மக்களுக்கும் பணிசெய்ய வேண்டிய கடப்பாடு உண்டு என்பதை மறந்துவிடுகிறார்கள். தமது சுகபோகம், சுயநலம் ஆகிய இரண்டையுமே முதன்மைப் படுத்தி வெளிநாடுகளுக்கு ஓடுகிறார்கள்.

தாம் அறிஞர்கள், திறமைசாலிகள், புத்திஜீவிகள், தொழில்சார் அதிகாரிகள் என்பதால், இன விடுதலைப் போராட்டம் போன்ற நெருக்கடியான காலங்களிலும் தாம் மேல்மட்ட மக்களாக, அந்தஸ்துள்ளவர்களாக வாழ வேண்டும் என்ற வக்கிரத்தனமும் அவர்களை அந்நிய நாட்டுக்குப் போகத் தூண்டுகிறது.

எப்படி நோக்கினும், தங்கள் சொந்த மண்ணை விட்டு நிரந்தரமாக அந்நிய தேசம் செல்பவர்களை சமூகம் ஒருபோதும் மன்னிக்க முடியாது; மன்னிக்கவும் கூடாது. இவர்கள் வாழ்க்கையை எதிர்கொள்ளத் துணிச்சல் இல்லாத கோழைகளும் ஆவார்.

நாளைய அறிஞர்களாகவும், ஆராய்ச்சியாளராகவும் வளரப்போகும் இன்றைய பல்கலைக்கழக மாணவர்களும் சுயநலம், சுயபோகம், வக்கிரம் செறிந்த கோழைகளாக மாறாமல் இருக்கப் பார்த்துக் கொள்வது அவசியம்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா அதற்கான சிறந்த வழிமுறை ஒன்றை முன்வைத்திருக்கிறார். பல்கலைக்கழக மாணவர்கள், அவர்கள் நகரப்புறங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், கிராமப் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களின் கஷ்டங்களைப் போக்குவதற்கு உழைக்க வேண்டும். அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவ வேண்டும். கிராம மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் — என்பதே துணைவேந்தர் கூறும் வழி.

மாணவர்களாக இருக்கும் காலத்திலேயே மக்களோடு மக்களாக உழைத்து, அவர்களுக்கு உதவிடப் பழகிவிட்டால் தமது கல்வியும், திறமையும், செயற்பாடும் இந்த மண்ணுக்கும், மக்களுக்குமே கிடைக்கவேண்டும் என்ற மனப்பக்குவம் நிச்சயம் வளர்ந்துவிடும்.

இன விடுதலைப் போராட்டம் நடக்கும் இவ்வேளை, அந்தப் பயிற்சியைப் பெற்று, சமூகத்துக்கு உழைக்க வேண்டும் என்ற மனப்பக்குவம் எய்துவதற்கு நல்ல சந்தர்ப்பம் எனலாம். இதனை நழுவவிடாமல், பல்கலைக் கழக மாணவரின் பயிற்சிநெறியின்போது மக்களுக்கு உழைக்கும் பயிற்சியையும் கட்டாயமாக்கினால் மேலும் சிறப்புடைப் பலன் கிடைக்கும்.

# யாழ். ஆஸ்பத்திரி எக்ஸ்ரே பிரிவு

# முழு அளவில் ஸ்தம்பிக்கும் ஆபத்து

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ். போதனா வைத்திய சாலை எக்ஸ்றே படப்பிடிப்புப் பகுதி எந்நேரமும் முழு அளவில் ஸ்தம்பிதம் அடையலாம் என்று அஞ்சப்படுகிறது.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு நான்கு எக்ஸ்றே படப்பிடிப்பு இயந்திரங்கள் இருந்த போதிலும், கடந்த இரண்டு வருடங்களாக இவற்றில் மூன்று இயந்திரங்கள் செயலிழந்த நிலையில் உள்ளன. ஒன்று மட்டுமே இயங்கி வந்தது.

தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் அந்த ஒரே ஒரு இயந்திரமும் செயல் இழந்து போகும் ஆபத்து இருந்து வருகிறது.

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் இந்த இயந்திரமும் செயலிழந்து போனது எனினும் உள்ளூர் தொழில்நுட்பவியலாளரின் உதவியுடன் திருத்தும் முயற்சிகள் அவசரமாக மேற்கொள்ளப்பட்டன. [இ-15]

## நல்லைக் குருமணியின் குருபூசை

யாழ்ப்பாணம், மார்ச் 18

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதர் தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பத்தாவது ஆண்டுக் குருபூசை, எதிர்வரும் சனிக்கிழமை 23 ஆம் திகதி ஆதீனத்தில் நடை பெற உள்ளது.

அன்று காலை 8 மணிக்கு யாக பூசையுடன் குருபூசை ஆரம்பமாகும். சங்காபிசேசம், விசேட பூசை, பஞ்சமுகார்ச்சனை என்பன சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

திருமுறை அர்ச்சனை, திருமுறை பாராயணம் என்பனவும் இடம்பெறும். மகேசுர பூசையின் பின்னர் பிற்பகல் 2 மணிக்கு பெரிய புராண படனம் ஆரம்பமாகி நடைபெறும். [அ]

## மருதங்கேணி ஆஸ்பத்திரி நோயாளர் உணவு நிறுத்தம்

தாளையடி, மார்ச் 18

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி அரசினர் வைத்திய சாலையில், வார்ட்டில் தங்கி இருக்கும் நோயாளர்களுக்கு கடந்த மூன்று மாதங்களாக உணவு வழங்கப்படுவதில்லை.

இதனால் வார்ட்டில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். [இ-114]

## கொழும்பு - காலி துறைமுகங்களை மையமாக வைத்தே திட்டங்கள்

கொழும்பு, மார்ச் 18

நாட்டின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் கொழும்பு மற்றும் காலித் துறைமுகங்களை மையமாக வைத்துத்தான் மேற்கொள்ளப்படுகின்றன.

கைத்தொழில் துறை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா ஆஸ்திரேலிய வானொலிக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

உலகிலேயே முன்னணி இயற்கைத் துறைமுகமான திருமலையைப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தலாமே என்று ஆஸ்திரேலிய வானொலிச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொரின் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் முன்கண்ட பதிலை அளித்தார்.

திருமலைத் துறைமுகமும் அதன் சுற்றுப்புறச் சூழலும் உல்லாசப்பயணி அபிவிருத்திக்கு உகந்தவையாகவே உள்ளன என்றும் அமைச்சர் சொன்னார். [இ-எ]

## மன்னார், வவுனியாவுக்கு விஜேதுங்க விஜயம்

கொழும்பு, மார்ச் 18

பாதுகாப்புத் துணை அமைச்சராகப் பதவி ஏற்ற பின்னர் பிரதமர் டி. பி. விஜேதுங்க கடந்த சனிக்கிழமை மன்னார் மற்றும் வவுனியா பகுதிகளுக்கு முதல் தடவையாக விஜயம் செய்தார்.

முதலில் மன்னார் சென்ற பிரதமர் பின்னர் வவுனியாவுக்கு விஜயம் செய்தார். அங்கு புதிய பொலீஸ் நிலையம் ஒன்றை அவர் திறந்து வைத்தார்.

இரு மாவட்டங்களின் நிலைமை குறித்து இராணுவ உயர் அதிகாரிகளுடன் திரு. விஜேதுங்க பேச்சுக்கள் நடத்தினார். [இ-எ]

## அருள்- 89 தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 18

வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் வீமன்காமம் இராணுவ காவல் அரணிலிருந்து வெளியேற முற்பட்ட படையினர் மீது விடுதலைப் புலிகள் ''அருள் 89'' ஷெல் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்பட்டது.

## வடக்கிற்கு கூடுதல் படைகள் என்கிறார் ஹமில்டன்

கொழும்பு, மார்ச் 18

வடபகுதிக்குக் கூடுதலான படைகள் அனுப்பப்பட்டுள்ளன என்றும்-

மூன்று புதிய தடைமுகாம்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ளன என்றும், இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா கூறியதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. வட பகுதி நிலைமை விரைவில் வழமைக்கு திரும்பும் என்றும் கூறிய தளபதி வனசிங்கா, கிழக்கு மாகாணத்தில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் தொடர்வதாகத் தெரிவித்தார் [இ-எ]

## மிதிவெடியில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

வெள்ளிக்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் தாண்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினர் வைத்த மிதிவெடியில் சிக்கி பொன்னையா பொன்ராசா (வயது 40 — இளமருதங்குளம்) என்பவர் உட்பட இருவர் காயமடைந்தனர். [உ]

## 5 நிலையங்களில் பரீட்சை

கிளிநொச்சி, மார்ச் 18

கிளிநொச்சி மாவட்டத்தில் விசேஷ ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்குரிய சகல ஏற்பாடுகளும் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தினால் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்திலும், கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்திலும் 5 பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும்.

பரீட்சைக்கு உரிய அனுமதி அட்டைகள் ஏப்பிரல் மாதம் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் வைத்து பரீட்சார்த்திகளிடம் வழங்கப்படும் என கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் [illegible] தெரிவித்தார். [இ-76]

## பாம்பினால் கடியுண்டு சிறுமி மரணம்

தென்மராட்சி, மார்ச் 18

மறவன்புலோவில் கடந்த வியாழக்கிழமை மாட்டுக்கு புல் வெட்டிக்கொண்டிருந்த சிறுமி ஒருத்தி பாம்பினால் கடியுண்டு மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இ. சிவரூபி (வயது [illegible]) என்பவரே இறந்தவர் [illegible] [ஓ-117]

## ரயில்வே ரிக்கெட் பணம் மீளளிப்பு

கடந்த ஆண்டு ஜூன் மாதம் ரயில் சேவை ரத்துச் செய்யப்பட்டதால் பயணம் செய்யாதவர்களின் ரிக்கெட்டுக்குரிய பணம் மீளளிப்புச் செய்யப்பட உள்ளது.

ரிக்கெட்டுக்களை இன்னும் வைத்திருப்போர் பணத்தை மீளளிப்புச் செய்யுமாறு கோரி கொழும்பு - 10இல் உள்ள ரயில்வே தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## மீளாய்வுக்காக பங்கீட்டு அட்டை ஒப்படைப்பு

மானிப்பாய், மார்ச் 18

வலிகாமம் தெற்கு. உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் நிவாரண அட்டைகள் பாவனையாளர்களினால் கிராம சேவையாளர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. மீளாய்வுக்காகவே இவை மீளப் பெறப்படுகின்றன.

மீளாய்வு செய்யப்படாத பங்கீட்டு அட்டைகளை வைத்திருப்பவர்களுக்கு அடுத்த கட்ட நிவாரணத்துக்குரிய பொருள்கள் வழங்கப்பட மாட்டாது என உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ்.வீரபுத்திரபிள்ளை அறிவித்துள்ளார். [இ-90]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

கடந்த வியாழனன்று ஆனையிறவில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த வீர வேங்கை அனஸ் வெள்ளிக்கிழமை வீரமரணமடைந்தார். [உ]

## ஈராக்கைப் புனரமைக்க சதாம் புதிய அரசு அமைப்பார்

பக்தாத், மார்ச் 18

ஈராக்கைப் புனரமைப்பதற்காக புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கப்போவதாக ஜனாதிபதி சதாம் ஹுசேன் அறிவித்திருக்கிறார்.

வளைகுடாப் போரின் பின்னர் தமது நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையில் ஜனாதிபதி சதாம் ஹுசேன் இதனைத் தெரிவித்தார்.

ஜனநாயக சீர்திருத்தங்களையும் நாட்டில் அமுல் நடத்தப்போவதாகவும் சதாம் ஹுசேன் கூறினார்.

ஈராக்கின் தெற்குப் பகுதியில் இடம்பெற்று வந்த ஆயுதக் கிளர்ச்சி அடக்கப்பட்டுவிட்டதாகவும் ஜனாதிபதி சதாம் ஹுசேன் சொன்னார். [இ-எ]

## சந்திரசேகர் - ராஜீவ் கட்சிகள் கூட்டுச் சாத்தியமில்லை

புதுடில்லி, மார்ச் 18

தற்போதைய சூழ்நிலையில் இந்திரா காங்கிரஸும் ஜனதாதள் சோஷலிஸ்ட் கட்சியும் இணைந்து ஓரணியில் செயற்படும் வாய்ப்புக் கிடையாது.

பிரதமர் சந்திரசேகர் கோயம்புத்தூரில் வைத்துச் செய்தியாளர்களிடம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அ.தி.மு.க வுடன் ஜனதாதள் சோஷலிஸ்ட் கட்சி கூட்டுச் சேர்வது, அ.தி.மு.க தலைவர்களில் தான் தங்கியுள்ளது என்றும் திரு. சந்திரசேகர் தெரிவித்தார். [இ எ]

## பத்திரிகையாளர்களுக்கு எதிராக அத்துமீறல்கள்

லண்டன், மார்ச் 18

கடந்த வருடம் உலகில் உள்ள நூறுக்கும் அதிகமான நாடுகளில் பத்திரிகையாளர்களுக்கு எதிராக ஆயிரத்துக்கும் அதிகமான வன்செயல் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நியூயோர்க் நகரில் அமைந்துள்ள பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான மனித உரிமைகள் சங்கத்தின் தலைமைச் செயலகம் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வருடம் சுமார் பதினைந்து நாடுகளில் முப்பது வரையான பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

270 இற்கும் அதிகமான பத்திரிகையாளர்கள் தங்கள் பணிகளை மேற்கொண்டதற்காகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

-இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சவூதி அரேபியா, ஈராக், இந்தியா, யூகோஸ்லாவியா, சீனா, கொலம்பியா, பர்மா, ரஷ்யா உட்பட 16 நாடுகளுக்கு எதிராக பாரிய குற்றச்சாட்டுகள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

சீனாவுக்கு எதிராகவே பல விஷயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாக்குதலுக்கு இலக்கான

# படகு கரை ஒதுங்கியது; இருவரைக் காணவில்லை

வடமராட்சி கிழக்கு கடற் பகுதியில் கடந்த வியாழக் கிழமை படகு ஒன்றின் மீது படையினர் தாக்குதல் நடத்தினர்.

படகில் சென்ற வத்திராயன் வடக்கைச் சேர்ந்த சண்முகம் ரதியழகன் [19 வயது] என்பவர் கடலில் குதித்து கரை சேர்ந்து விட்டார்.

படகில் சென்ற மாதகலைச் சேர்ந்த மற்றும் இருவரது கதி தெரியவில்லை.

அதேசமயம் அவர்கள் சென்ற படகு சேதமான நிலையில் கடந்த வெள்ளிக் கிழமை உடுத்துறையில் கரை ஒதுங்கியது. [ஒ144]

## சோவியத் சர்வசன வாக்கெடுப்பு

# ஆறு குடியரசுகளில் 1 லட்சம் பேரே வாக்களிப்பு

சோவியத் யூனியனின் தற்போதைய அரசமைப்பு முறையைத் தொடருவதா, இல்லையா என்பதை தீர்மானிக்கும் சர்வசன வாக்கெடுப்பு நேற்று நடந்தது முடிவுகள் இன்னும் பத்து நாட்களில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டாட்சி அமைப்பில் மொத்தம் உள்ள 15 குடியரசுகளில் ஆர்மேனியா, மொல்டேவியா, ஜோர்ஜியா, லத்வியா, எஸ்தோனியா, லித்துவேனியா ஆகிய ஆறு மாநிலக் குடியரசுகள் இவ் வாக்கெடுப்பை புறக்கணித்தன என்று டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

இந்த ஆறு மாநிலங்களில், ஒன்றிணைந்த தற்போதைய சோவியத்யூனியனே தொடர்ந்து இருக்கவேண்டும் என்று கோரும் சுமார் ஒருலட்சம் பேர் இராணுவத்தளங்களில் நிறுவப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் தங்கள் வாக்குகளை அளித்தனர்.

இவ்வாறு மாநிலங்களில் வாழும் மக்களின் எண்ணிக்கை சோவியத் யூனியனின் மொத்த சனத்தொகையில் பத்துச்சதவீதமே என்றபடியால், இவற்றின் புறக்கணிப்பு ஜனாதிபதி கோர்பச்சேவின் கொள்கையைப் பாதிக்காது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

# மரண அறிவித்தல்கள்

## இரகுநாதன் சரவணபவன் (வீரவேங்கை சிந்து)

உடுவில் டச் றோட்டைச் சேர்ந்த இரகுநாதன் சரவணபவன் [யா / மகாஜனாக் கல்லூரி - தெல்லிப்பளை] 25-02-1991 திங்கட்கிழமை வீரமரணமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற இராசலிங்கம் இரகுநாதன் [உதவி வைத்திய அதிகாரி, கல்முனை], திருமதி லோகாம்பிகை இரகுநாதன் [ஆசிரியை, யா / தமிழ் கந்தையா வித்தியாலயம், கந்தரோடை] அவர்களது ஏக புத்திரனும், திரு. திருமதி செல்லத்துரையின் பேரனும், திரு. இ. மகேஸ்வரன் [கனடா], திரு இ. சண்முகநாதன் [கனடா], திரு. திருமதி இந்திரசிங்கம் [ஆசிரியர், யா / மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை], திரு திருமதி சின்னையா [ஆசிரியர், யா / யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை] ஆகியோரின் பெறா மகனுமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எம். ரி. சின்னையா

[சி/5866]

## செல்வி யூலியற் றாஜிவி (றதினி)

அச்சுவேலியைச் சேர்ந்த செல்வி யூலியற் றாஜிவி (றதினி) காலமானார்.

இவர் சூசைப்பிள்ளை [முன்னாள் அதிபர், ஒட்டசப்புலம் றோ. க. பாடசாலை], புஸ்பராணி ஆகியோரின் அன்பு மகளும், பெனற் றாஜ் [அமெரிக்கா], மாறியற் றஜிவி, டன்சன் றாஜ் [பிரான்ஸ்], ஜஸ்ரின் றாஜ், வயலற் றாஜினி, ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 18-3-1991 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அச்சுவேலி புனித சூசையப்பர் சேமக்காலையில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஞா. அல்பேட்

[15914]

## செபஸ்தி டேவிற்

[இளைப்பாறிய ஊழியர் - இலங்கை புகையிரத திணைக்களம்]

செபஸ்தி டேவிற் [இளைப்பாறிய ஊழியர் - இலங்கை புகையிரதத் திணைக்களம்] 17-3-1991 இல் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று [18-3-91] மாலை 4 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
மனைவி, பிள்ளைகள்.

74/1, டேவிற் றோட்,
குருநகர், யாழ்ப்பாணம்.

[15915]

## றொஹான் அடுத்த மாதமே பதவி ஏற்பார்

கொழும்பு, மார்ச் 18

மறைந்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவின் இடத்துக்கு எம். பியாக நியமிக்கப்பட்ட அவரது மகன் றொஹான் விஜேரத்தினா அடுத்த மாதமே எம். பியாக பதவிப்பிரமாணம் செய்து கொள்வார்.

அமெரிக்கா சென்று சில தனிப்பட்ட அலுவல்களை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதுமே எம் பி. பதவியை ஏற்றுக் கொள்ளப் போவதாக திரு. றொஹான் விஜேரத்தினா ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார். [ஒ-எ]

## யானையால் தூக்கிவீசப்பட்ட பெண்!

யாழ்ப்பாணம், மார்ச் 18

யானையால் தூக்கி வீசப்பட்ட பெண் தலையில் படுகாயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்,

உடையார்கட்டு மூங்கில் ஆறு பகுதியில் நேற்று நடந்த இந்தச் சம்பவத்தில் ரி அற்புதமலர் [40 வயது] என்பவரே படுகாயமடைந்தார். [ஒ-3]

## நீதிமன்ற பதிவறையில் தீ

கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள பதிவறை கடந்த சனிக்கிழமை இரவு முற்றாக எரிந்து போனதாக அறிவிக்கப்படுகிறது.

இனந்தெரியாதவர்கள் மாவட்ட நீதிமன்றக் கட்டடத்திற்கு தீவைத்தனர் என்று கூறப்படுகிறது.

பதிவறையில் இருந்த தஸ்தாவேஜுகள் அனைத்தும் நாசமாகின என்றும் அறிவிக்கப்படுகிறது [இ-எ]

## வீர மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

கடந்த வியாழனன்று மட்டக்களப்பு மாவட்டம் புலிபாய்ந்தகல்லில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான விமல் [த பிரபாகரன் பொத்துவில்] வீரமரணமடைந்தார்.

★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 18

கடந்த புதனன்று காலை 6 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் தன்னாமுனை சினன்வாடியிலிருந்து விடுதலைப் புலிகள் வந்து கொண்டிருந்தபோது அப்பகுதியில் பதுங்கியிருந்த இராணுவத்தினருடன் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மோதலில் மல்கோத்ரா [மட்டக்களப்பு] என்ற போராளி வீரமரணமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் அவருடன் கூட வந்த விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளரான குமார் [இருதயபுரம்] என்பவரும் வீரமரணமடைந்தார். [உ]

## ஈராக்கிற்கு இப்படியும் நெருக்குதல்

ஈராக் தம்மிடம் உள்ள இரசாயன ஆயுதங்களை அழித்த பின்னர் தான், அந்த நாட்டின் மீதான பொருளாதாரத் தடை உட்பட சகல கட்டுப்பாடுகளும் நீக்கப்பட வேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் பிரிட்டிஷ் பிரதமர் மேஜரும் கூட்டாக முன் கண்ட முடிவை எடுத்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இரு தலைவர்களும் பெர்முடா தீவில் கடந்த சனிக் கிழமை பேச்சுக்கள் நடத்தினர். [ஒ.எ]

## பல்கலைக்கழக அனுமதி

# வெட்டுப் புள்ளி விவரம் உத்தியோகபூர்வ அறிவிப்பு

1990—91 கல்வியாண்டுக்கு பல்கலைக்கழகங்களில் மாணவர்களை அனுமதிப்பதற்குத் தேவையான ஆகக் குறைந்த வெட்டுப் புள்ளிகளை [Cut-out Marks] பல்கலைக்கழக மான்ய ஆணைக் குழு உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது.

1989 ஆகஸ்டில் நடந்த ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாக வைத்து 25 மாவட்டங்களுக்குமாக இந்த வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன;

இதுபற்றி சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு விரைவில் அறிவிக்கப்படும் என்றும் பல்கலைக்கழக மான்ய ஆணைக் குழு அறிவித்துள்ளது.

வெட்டுப் புள்ளி விவரம் கடந்த 23-11-1990 திகதிய உதயனில் வெளியிடப்பட்டிருந்தது.

பல்கலைக்கழகங்களில் 14 துறைகளுக்கும் வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [அ-எ]

# கத்தரிக்காய் கறி சாப்பிட்ட மூவர் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம், மார்ச் 18

வீட்டுத் தோட்டத்தில் பிடுங்கிய கத்தரிக்காயை சமைத்துச் சாப்பிட்ட மூவர் மயங்கினர். அவர்கள் பின்னர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று மாலை 4 மணியளவில் நாரந்தனையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

எஸ். ரமீனா [16 வயது], பிரான்சிஸ் அந்தோனியாப்பிள்ளை [65 வயது], ரி. அருள் நேசன் [8 வயது] ஆகியோரே மயங்கிய மூவரும் ஆவர். [ஒ-3]

## வளலாயில் மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 18

வளலாய்ப் பகுதியிலிருந்து இராணுவத்தினர் நேற்றுக் காலை 6 மணியளவிலும் நண்பகல் 1 மணியளவிலும் வெளியேற முட்பட்டபோது அவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

மோதல்களை அடுத்து இராணுவத்தினர் முகாமுக்குப் பின் வாங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ]

## மகாபொலவுக்கு இங்கும் 493 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ். பல்கலைக் கழகத்தில் இருந்து 493 மாணவர்கள் மகாபொல உதவித் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மகாபொலவுக்கு அகில இலங்கை ரீதியில் 3 ஆயிரத்து 500 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே; [ஒ 3]

## மேஜர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ராக விளங்கிய செங்கதிர், இறந்த பேச்சாளரும் கலைஞனும் ஆவார்.

தேசிய விடுதலையுடன் கூடிய சமூக விடுதலையை இலக்காகக் கொண்ட புலிகளின் இயக்கத்தின் இலட்சியத்தை நோக்கிய வேலைத் திட்டங்களிலும் அரசியல் பிரசாரங்களிலும் மேஜர் செங்கதிர் காட்டிய ஈடுபாடு அளப்பரியது.

வவுனியாவில் கடந்த 25 ஆம் திகதி வீரமரணமடைந்த மேஜர் செங்கதிருக்கும் அவருடன் வீரமரணமடைந்த சிந்து [இரகுநாதன் சரவணபவன்] வுக்கும் விடுதலைப் புலிகள் வீரவணக்கங்களைத் தெரிவித்துள்ளனர். [ஒ]

## விளக்கு வெடித்து சிறுமி காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

மண் எண்ணெய் குப்பி விளக்கு வெடித்ததில் மூன்று வயதுச் சிறுமி உடல் முழுவதும் எரிந்த நிலையில் -ஆபத்தான நிலையில்- யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்;

நேற்றிரவு 7 மணியளவில் கோப்பாய் தெற்கில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் அமிர்தலிங்கம் சுபேதா [3 வயது] என்ற சிறுமியே காயமடைந்தவராவார். [ஒ-3]

## தமிழர் சுயநிர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கை அரசின் மீது ராஜியத் துறை நிர்ப்பந்தத்தை கொண்டுவர வேண்டும்என்று விரும்புகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசுமேற் கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளையும் விமானக் குண்டு வீச்சுக்களையும் நிறுத்தி பேச்சு மூலம் தீர்வு காணும்படி இந்தியா வற்புறுத்த வேண்டும் என்று விடுதலைப்புலிகள் இயக்கம் கேட்டுக் கொள்ளும் என்று இவர்கள் இருவரும் கூறினார்கள்;

தமிழர்களின் சுய நிர்ணய உரிமைக்காக விடுதலைப் புலிகள் நடத்தும் போராட்டத்திற்கு இந்தியா அங்கிகாரம் அளிக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் விரும்புவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். [ஒ-எ]

## தேங்காய்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்ப்பாண வர்த்தகர்கள் மூவர், மொத்தம் முப்பதினாயிரம் தேங்காய்களை இங்கு கொண்டு வருவதற்கு கூட்டுப் படைத் தலைமை அலுவலகத்திடம் கடந்த வாரம் அனுமதி பெற்றுள்ளார்களாம்; [அ-3]

## 3 மாதங்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துக்கு 60 லட்சம் ரூபா வழங்கும் முடிவை பாதுகாப்புச் சபை அங்கிகரித்து விட்டதாக, கடந்த டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் இணைப்புக்குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. ஆனால் மூன்று மாதம் கழிந்து இப்போது தான் பணம் வந்திருக்கிறது. [ஒ-3]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org